# 3 நல்லாயர்

**ஆண்டவரே எம் ஆயர் என அறிந்து நல்லாயனின் பண்புகளை எமது வாழ்வுக்கு உரித்தாக்கும் வழிமுறைகளைக் கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**எசேக்கியேல் 34:11-19, திருப்பாடல் 23, யோவான் 19:7-16**

## நல்லாயர் தொடர்பாக திருவிவிலியத்தில் வெளிப்படும் கருத்துகள்

இஸ்ரயேல் மக்கள் மத்தியில் ஆயர் தொழில் பலருக்கும் பழக்கப்பட்ட ஒன்றாகும். மந்தை உரிமையாளர் சிலரின் கீழ் பலர் பணி செய்தனர். இவர்கள் மத்தியில் சிறு மந்தைக் கூட்டத்தின் உரிமையாளராகவும் சிலர் இருந்தனர். ஆபெல், யாக்கோபு, அவரது புத்திரர், தாவீது போன்றவர்கள் இவ்வாறு ஆயர் தொழில் செய்தவர்கள் ஆவர்.

இவ்வாறான பின்னணியில், இஸ்ரயேலர் இறைவனை தமது ஆயராகக் கருதினர். (தொ.நூ. 48:15) கி.மு. பத்தாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட திருப்பாடல்களில் மேற்படி கருத்தானது மிகப் பொருத்தமுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ளது (திருப் பாடல் 23) இறைவன் தமது மக்களில் எதிர்பார்க்கும் தலைமைத்துவப் பாத்திரத்தை அவர்கள் ஆயரின் உருவகமாகக் கருதினர். (எசேக்கியேல் 34:11-16)

புதிய ஏற்பாட்டிலும் இயேசுவை நல்லாயராகக் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணலாம். (யோவான் 10:7-9) இவ்வாறு குறிப்பிடப்பட்ட கருத்துகள் மற்றும் போதனைகள் மூலம் இறைவன் எம்மில் காட்டும் அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு போன்றன வெளிப்படுகின்றன. இவ்வாறே தலைவர்களாகச் செயற்படும் ஒவ்வொருவரிடமிருந்தும் இப்பொறுப்புக்களை கடவுள் எதிர்பார்க்கின்றனர்.

### நல்லாயரின் பண்புகள்

இப் பாடத்தில் குறிப்பிடப்பட்ட திருவிவிலிய பகுதிகளின் அடிப்படையில் நல்லாயரின் பண்புகளை அறிந்து கொள்வோம். இவைகளில் நல்லாயரின் நற்பண்புகள் பொறுப்புக்களுடன் இணைந்து காணப்படுகின்றன.

## (அ) போசணை ஊட்டல்

மந்தைகளுக்குத் தேவையான உணவு மற்றும் நீர் வழங்குதல் ஆயரின் பிரதான மான கடமைகள் ஆகும். 'ஆயர் தமது மந்தையை பசும்புல் வெளி மீது இளைப்பாறச் செய்வார். (திருப்பாடல் 23:2) 'அவைகளை நல்ல மேய்ச்சல் நிலத்தில் மேய்ப்பேன்.' (எசேக்கியேல் 34:14)

## (ஆ) வழிநடத்துதல், பராமரித்தல், தேடிக்கண்டுபிடித்தல்

ஆயர் எப்போதும் மந்தைகளுடன் காணப்பட்டார். (திருப்பாடல் 23:4) இது தொடர்பாக எசேக்கியேல் 34:16 ஐ நினைவுகூரல் முக்கியம். ''காணாமல் போனதைத் தேடுவேன், அலைந்து திரிவதைக் கொண்டு வருவேன்; காயப் பட்டதற்குக் கட்டுப் போடுவேன்; நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன்.'' தனது கோல் மற்றும் நெடுங்கழியுடன் (திருப்பாடல் 23:4) வழிகாட்டும் ஆயன் காணாமல் போனவைகளைத் தேடிக் காயப்பட்டவைகளைப் பாதுகாத்து ஆயத்துவத்தின் பொறுப்பை நிறைவேற்றுகின்றார்.

## (இ) பாதுகாத்தல், வாழ்வை அர்ப்பணித்தல்

இவைகள் ஆயரின் முக்கியமான கடமைகள் ஆகும். தாவீது அரசன் ''சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் (திருப்பாடல் 23:4) என அழகாகக் குறிப்பிடுகின்றார். அர்ப்பணிப்பு நிறைந்த ஆயன் தனது மந்தைகளுடன் வாழ்ந்து அவைகளைப் பாதுகாக்கின்றார். அதேபோன்று 'எதிரிகளின் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்' என்பதிலிருந்து மந்தை அதாவது மக்கள் இறைபாதுகாப்பை முழுமையாகப் பெற்று வாழ்தல் என்பதாகும். நல்லாயர் மந்தைகளுக்காகத் தனது உயிரையும் அர்ப்பணிப்பார் என்ற கருத்து வெளிப்படுகின்றது. 'நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரையும் கொடுப்பார்.' யோவான் 10:11)

## (ஈ) அறிந்து வைத்திருத்தல்

ஆயனின் மற்றுமொரு குணமானது மந்தைகளிடம் காட்டும் தொடர்பாடல் ஆகும். தொடர்பாடலின் ஊடாக மந்தைகளை நன்கு அறிந்து வைத்துள்ளார். இது தொடர்பாக யோவான் நற்செய்தி நூலில் 'நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கின்றார். அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன' என்று இயேசு கூறுகின்றார். (யோவான் 10:4, 14,15) இங்கு ஆயருக்கும் ஆடுகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.



**ஆயத்துவத்தின் முன்மாதிரிகள்**

i. நாம் ஆயராகச் செயற்பட வேண்டிய முறைகள்

ii. நாம் ஆடுகளாகச் செயற்பட வேண்டிய முறைகள்

## ஆயராக நாம் செயற்படும் முறை

### (அ) ஆயர் அன்பு

ஆயரானவர் அன்பை முதன்மைப்படுத்தியே தமது ஆடுகள் சார்பாக செயற் படுவார். மந்தைகளைப் பராமரித்தல், பாதுகாத்தல், தேடிக்கண்டு பிடித்தல், காயங்களைக் கட்டுதல் போன்ற அனைத்துச் செயல்களையும் அன்புடன் செய்கின்றார். நாம் தலைவராகக் கடமை புரியும் வேளையில் அதிகாரத்துடன் செயற்படாது பிறருடன் அன்போடு செயற்பட வேண்டும்.

### (ஆ) அர்ப்பணிப்பு

அன்பானது அர்ப்பணிப்பில் முழுமையடையும். இயேசு 'ஆடுகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்.' என்றார். (யோவான் 10:15) நாமும் எமது தேவைகளைக் குறைத்து சமூகத்தில் வாழ்பவர்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

### (இ) பணிநிலை

ஆண்டவரே எமது நல்லாயர். இதனால் கடவுளில் நம்பிக்கைவைத்து, கடவு ளுடன் இணைந்து சமூகத்தில் பணி செய்தல் வேண்டும். யோவான் 10:16 இல் ''இக் கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன.'' இதற்கேற்ப ஆயரின் மந்தை நாம் மட்டுமல்ல பிறருக்கும் எமது பணி உரித்தாக வேண்டும்.

## நாம் ஆடுகளாக செயற்படும் முறை

**(அ) ஆயரின் குரலுக்கு மாறுத்தரம் காட்டல்**

'அவர் அவற்றுக்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின் தொடரும். அறியாத ஒருவரை அவை பின் தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும்' (யோவான் 10:4-5)

**(ஆ) ஆயரின் குரலுக்கு செவி கொடுத்தல்**

'நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர். வெளியே வருவர். மேய்ச்சல் நிலத்தை கண்டு கொள்வர்.' (யோவான் 10:8) இயேசுவின் விருப்பத்தைப் பின்பற்றி ஆடுகளாகிய நாமும் ஆபத்துக்களிலிருந்து விலகி வாழ முடியும். இருப்பினும் இறை விருப்புக்கு கீழ்படியாத வாழ்வு அழிவுறும். அது ஆபத்தை நோக்கிப் பயணிக்கும்.

**(இ) ஆயருக்கு விசுவாசத்துடன் கீழ்படிதல்**

''நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்'' (யோவான் 10:10). ஆயருக்கு கீழ்படிந்து விசுவாசத் துடன் வாழ்வோமானால் மந்தைகளாகிய எமக்கும் முழுமை வாழ்வு நிலை உருவாகும். தீய ஆயர் பலர் எம்மைச் சூழ்ந்து வாழ்கின்றனர். அவர்களின் செயற்பாடுகளை விலக்கி நல்லாயர் விசுவாசத்துடன் வாழ்தல் சிறந்தது.

***<u>தீய ஆயரின் நோக்கு அழிவுக்குரியது</u>***

'திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்கும் அன்றி திருடர் வேறெதற்கும் வருவதில்லை.'
(யோவான் 10:10)

''கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப் போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல. ஆடுகள் அவருக்கு சொந்தமுமல்ல'' (யோவான் 10:12).

மேற்குறிப்பிட்ட கருத்துகள் மூலம் ஆண்டவர் இயேசு நமக்குரிய ஒரே நல்ல ஆயர் என்பது தெளிவாகின்றது. மேலும் நாம் இயேசுவின் மந்தையின் ஆடுகள் என்ற ரீதியில், இயேசுவுக்கு நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதும் இங்கு வெளிப்படுகின்றது. மந்தையில் இருந்து விலகி, தன்னலமுடையவர்களாக இருக்கும்போது உலகின் தீயவனின் பிடியில் நாம் சிக்கிவிடுவோம் என்பதை உணர்ந்து, நாம் எமது கிறிஸ்தவ வாழ்வை பொருளுள்ளதாக்குவோம்.

**செயற்பாடு**

01. பின்வரும் திருவிவிலிய பகுதிகளை வாசித்து நல்லஆயர் / தீயஆயரின் பண்புகளை அட்டவணையில் பூர்த்தி செய்க.

திருப்பாடல் 23, எசேக்கியேல் 34:1-8

| நல்லஆயரின் பண்புகள் | தீயஆயரின் பண்புகள் |
|---|---|
| ....................... | ....................... |
| ....................... | ....................... |
| ....................... | ....................... |

02. இறைவார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயர் பண்புகளை தமது வாழ்வில் பிரதிபலித்த, இரு தலைவர்களின் பெயர்களை குறிப்பிட்டு அவர்களிடம் காணப்பட்ட ஆயத்துவப் பண்புகளை எழுதுக.